
10. கொடுக்கப்பட்ட படத்தில், $PR = 26$ செ.மீ, $QR = 24$ செ.மீ, $\angle PAQ = 90^\circ$, $PA=6$ செ.மீ மற்றும் $QA = 8$ செ.மீ எனில் $\angle PQR$ –ஐக் காண்க.




(அ) $80^\circ$ (ஆ) $85^\circ$ (இ) $75^\circ$ (ஈ) $90^\circ$

11. வட்டத்தின் தொடுகோடும் அதன் ஆரமும் செங்குத்தாக அமையும் இடம்

(அ) மையம் (ஆ) தொடு புள்ளி (இ) முடிவிலி (ஈ) நாண்


12. வட்டத்தின் வெளிப்புறப் புள்ளியிலிருந்து வட்டத்திற்கு எத்தனை தொடுகோடுகள் வரையலாம்?

(அ) ஒன்று (ஆ) இரண்டு (இ) முடிவற்ற எண்ணிக்கை (ஈ) பூஜ்ஜியம்

13. $O$ -வை மையமாக உடைய வட்டத்திற்கு, வெளியேயுள்ள புள்ளி $P$ -யிலிருந்து வரையப்பட்ட தொடுகோடுகள் $PA$ மற்றும் $PB$ ஆகும். $\angle APB = 70^\circ$ எனில், $\angle AOB$ -யின் மதிப்பு

(அ) $100^\circ$ (ஆ) $110^\circ$ (இ) $120^\circ$ (ஈ) $130^\circ$


14. படத்தில் $O$ -வை மையமாக உடைய வட்டத்தின் தொடுகோடுகள் $CP$ மற்றும் $CQ$ ஆகும். $ARB$ ஆனது வட்டத்தின் மீதுள்ள புள்ளி $R$ வழியாகச் செல்லும் மற்றொரு தொடுகோடு ஆகும். $CP = 11$ செ.மீ மற்றும் $BC = 7$ செ.மீ, எனில் $BR$ –யின் நீளம்




(அ) 6 செ.மீ (ஆ) 5 செ.மீ

(இ) 8 செ.மீ (ஈ) 4 செ.மீ

15. படத்தில் உள்ளவாறு $O$ -வை மையமாகக் கொண்ட வட்டத்தின் தொடுகோடு $PR$ எனில், $\angle POQ$ ஆனது




(அ) $120^\circ$ (ஆ) $100^\circ$

(இ) $110^\circ$ (ஈ) $90^\circ$